இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 14-05-2025

# போர் மேகங்களுக்குள் புகையும் மர்மங்கள்!

பயங்கரவாத – தீவிரவாதச் செயல்களுக்கு பின்னணியாக மட்டுமல்ல – முன்னணியாகவும் இருக்கும் பாகிஸ்தான் மீது இந்திய ராணுவம் நடத்திய தாக்குதல் குறித்த தகவல்களை ராணுவம் தரப்பில் இருந்து வெளியிட்டுள்ளார்கள்.

**“இந்திய ராணுவத்தின் திறன்களை வெற்றிகரமாக வெளிப்படுத்தும் வகையில் ‘ஆபரேஷன் சிந்தூர்’ அமைந்தது. இந்தியாவின் நோக்கங்களை அடைய பல்வேறு துல்லியமான ராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. தீவிரவாதிகளின் 9 தளங்கள் மீது ஒருங்கிணைந்த துல்லியமான ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பாகிஸ்தானில் 4 தீவிரவாத முகாம்கள், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் 5 தீவிரவாத முகாம்கள் தாக்கி அழிக்கப்பட்டன. லாகூர் உட்பட, பாகிஸ்தான் முழுவதும் உள்ள வான் பாதுகாப்பு அமைப்புகளை அழிக்க காமிகேஸ் ட்ரோன்கள் ஏவப்பட்டன” என்று இந்திய ராணுவம் கூறியிருக்கிறது. இவை அனைத்தும் வரவேற்கத் தக்க நடவடிக்கையே.**

பயங்கரவாத அமைப்புகள் தனித்துச் செயல்பட்டாலும், ஏதாவது ஒரு நாட்டின் பின்னணியில் இருந்து செயல்பட்டாலும் அவர்கள் மீது தாக்குதல் நடத்தி பாடம் கற்பிக்க வேண்டியது கடமையாகும். அத்தகைய கம்பீரமான செயலை இந்திய ராணுவம் செய்துள்ளது.

பயங்கரவாதிகளை ஒழிக்கும் நடவடிக்கைக்குப் பின்னால், பயங்கரவாதச் செயல்களை ஆதரிக்கும் பாகிஸ்தான் மீது போர் தொடுக்கும் செயல்களை இங்கு யாரும் விமர்சிக்கவில்லை. ஆனால் இந்த போருக்குப் பின்னால் வெளிவரும் செய்திகள் சர்ச்சைக்குரியதாக இருப்பதை மறுப்பதற்கு இல்லை.

ஏனென்றால் இந்தியா – பாகிஸ்தான் ஆகிய இருநாடுகளுக்கு இடையிலான போர் நிறுத்தப்படுகிறது என்பதை இந்தியா அறிவிப்பதற்கு முன்னால், பாகிஸ்தான் சொல்வதற்கு முன்னால் அமெரிக்க அதிபர் டிரம்ப் சொல்லி விட்டார். இது இந்தியாவுக்கு பெருமை தரும் செயல் அல்ல.

குஜராத் முதலமைச்சராக இருந்த போது மோடி ஒரு பேட்டி அளித்திருக்கிறார். **“பாகிஸ்தான் நம்மைத் தாக்கிவிட்டுச் சென்று விட்டது. பாகிஸ்தான் மும்பையில் ஒரு தாக்குதல் நடத்தியது. உடனே நமது அமைச்சர் அமெரிக்கா போய் அழ ஆரம்பித்து விட்டார். ‘ஒபாமா! ஒபாமா! அவர்கள் எங்களைத் தாக்கிவிட்டுப் போய்விட்டார்கள். காப்பாற்றுங்கள். காப்பாற்றுங்கள்’ என்று. இது என்ன மாதிரியான செயல்? பக்கத்து நாட்டுக்காரன் தாக்கிவிட்டுப் போனால் நீ அமெரிக்கா போவதா? பாகிஸ்தானுக்குப் போயேன்”** என்று சொன்னவர் அன்றைய மோடி. ஆனால் இன்று அவரது ஆட்சி காலத்தில் என்ன நடந்திருக்கிறது? அமெரிக்க அதிபர் என்ன சொல்கிறார்?

**“நாங்கள் இந்தியா – பாகிஸ்தான் இடையேயான அணுசக்தி மோதலை நிறுத்தினோம். அது ஒரு மோசமான அணுசக்தி போராக இருந்திருக்கலாம் என்று கருதுகிறேன். அப்படி நடந்திருந்தால் மில்லியன் கணக்கான மக்கள் இறந்திருக்கலாம். நீங்கள் இருவரும் போரை நிறுத்தவில்லை என்றால், நாங்கள் எந்த வர்த்தகத்தையும் செய்யப்போவதில்லை என்று நான் கூறினேன்”** என்று சொல்லி இருக்கிறார் டிரம்ப்.

**அமெரிக்க அதிபர் டிரம்ப் வெளியிட்ட தகவல்களுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசுதான் விளக்கம் அளிக்க வேண்டும். ஆனால் அமெரிக்க தலையீடு குறித்து தனது உரையில் பிரதமர் மோடி விளக்கம் அளிக்கவே இல்லை. ‘நான் சொல்லித்தான் போர் நிறுத்தம் செய்யப்பட்டது’ என்று டிரம்ப் சொன்னதற்கும் பதில் சொல்லவில்லை. ‘மூன்றாவது நாட்டின் தலையீடு’ குறித்தும் மறுத்துப் பேசவில்லை. ‘காஷ்மீர் விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்யத் தயார்’ என டிரம்ப் கூறியதை பிரதமர் மோடி மறுத்திருக்க வேண்டாமா? தனது 25 நிமிட உரையில் அமெரிக்க தலையீடு குறித்து பேசுவதை தவிர்த்தார். எதிர்க்கட்சிகளின் சந்தேகங்கள், கேள்விகளுக்கும் பிரதமர் மோடியின் உரையில் விளக்கம் தரப்படவில்லை. போர் நிறுத்தத்தில் மூன்றாவது நாட்டின் தலையீடு இருந்ததா என்பதற்கும் பிரதமர் மோடி விளக்கம் தரவில்லை.**

போர் நிறுத்தமாவது முறையாக நடக்கிறதா என்றால் அதுவும் இல்லை. 10 ஆம் தேதியன்று மாலை 5 மணிக்கு போர் நிறுத்தம் என அறிவிக்கப்பட்டது. ஆனால் அன்றைய இரவும் பாகிஸ்தான் தனது தாக்குதலைத் தொடர்ந்தது. 12 ஆம் தேதியன்று இந்தியா – பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் பேச்சுவார்த்தை தொடங்கியது என்று மதியம் 12 மணிக்கு தகவல்கள் சொல்லப்படுகிறது. இந்தியா – பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகள் இடையே ஹாட்லைன் மூலம் பேச்சுவார்த்தை தொடங்கியது என்றும், இரு தரப்பிலிருந்தும், ராணுவ நடவடிக்கைகளுக்கான தலைமை இயக்குநர்கள் (DGMO) பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள் என்றும் செய்திகள் அதிகாரப் பூர்வமாகச் சொல்லப்பட்டன.

இரவு 8 மணிக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார். ஆனால் இரவில் என்ன நடந்தது? எல்லையில் பாகிஸ்தான் மீண்டும் அத்துமீறல் செய்தது. சம்பா மாவட்டத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. ஜம்மு, காஷ்மீருக்குள் ஊடுருவ முயன்ற பாகிஸ்தான் ட்ரோன்களை, பாதுகாப்புப்படையினர் சுட்டு வீழ்த்தி இருக்கிறார்கள். போர் நிறுத்தம் செய்யப்பட்டதாக இந்தியப் பிரதமர் அதிகாரப்பூர்வமாக விளக்கம் அளித்த பிறகு, பாகிஸ்தான் எப்படி அத்துமீறல் செய்கிறது? அப்படியானால் போரை இருதரப்பும் இல்லாமல், ஒரு தரப்பு மட்டுமே செய்ததா?

‘ஆபரேஷன் சிந்தூர்’ நடவடிக்கைக்குப் பிறகு 12 ஆம் தேதி இரவு 8 மணிக்கு முதன்முறையாக நாட்டு மக்களுக்கு உரையாற்றினார் பிரதமர் மோடி. **“அடி தாங்க முடியாமல் பாகிஸ்தானியர்கள் நம்மை தொடர்பு கொண்டு பேசினார்கள். இந்தியா அடித்து நொறுக்கியதால் போர் நிறுத்தத்திற்கு பாகிஸ்தான் கெஞ்ச வேண்டிய சூழல் ஏற்பட்டது. பாகிஸ்தான் டி.ஜி.எம்.ஓ. நமது ராணுவத்தை தொடர்பு கொண்டு போர் நிறுத்த கோரிக்கை வைத்தார். பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் அடியால் தாக்குதலை நிறுத்துவதாக பாகிஸ்தான் ஒப்புக்கொண்ட பின் நாம் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டோம். போர் நிறுத்தம் தற்காலிகமானது தான். நமது படைகள் பாகிஸ்தானை கண்காணிக்கின்றன. இனிமேல் அவர்கள் அத்துமீறினால் முகத்திலேயே தாக்குவோம்”** என்றார் பிரதமர் மோடி.

**அவர்கள் போர் நிறுத்தத்துக்கு முன்வந்தார்கள் என்றால், மீண்டும் ஏன் தாக்குதல் நடத்துகிறார்கள்? போரில் முதலில் மரணிப்பது உண்மைதான் என்பார்கள். உண்மை மறைகிறது. மர்மம் உயிர்வாழ்கிறது.**



வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்றத் தொகுதி கரிகிரி ஊராட்சியில் கழக அரசின் சாதனை விளக்க மாபெரும் பொதுக் கூட்டத்தில் கழக பொதுச் செயலாளர், சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சிறப்புரையாற்றினார். இதில் மேற்கு ஒன்றிய கழகசெயலாளர் எஸ்.தணிகாசலம், பொதுக் குழு உறுப்பினர் தயாநிதி, வடக்கு பகுதி செயலாளர் வன்னியராஜா, ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், துணை தலைவர் சரவணன், தலைமைக் கழக பேச்சாளர் விஷார் க.தமிழரசன், ஒன்றியக் குழு உறுப்பினர் இ.இளம்பூபதி, வட்ட கழக செயலாளர் கோரந்தாங்கல் குமார், வேலூர் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோ.முரளிபாஸ்கர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.5.2025) சென்னை, திருவொற்றியூரில் நடைபெற்ற அரசு விழாவில் 1,500 பயனாளிகளுக்கு வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், ப.தாயகம் கவி, ஆர்.டி.சேகர், டாக்டர் நா.எழிலன், ஆர்.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, கே.பி.சங்கர், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ் குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நில நிர்வாக ஆணையர் டாக்டர். கே.எஸ். பழனிசாமி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் ப. மதுசூதன் ரெட்டி, உள்பட அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்தவில்

# மாநிலத்தில் அரியலூர் மாவட்டம் முதலிடம்!

## மாணவ – மாணவிகளுக்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் வாழ்த்து!

அரியலூர்,மே.14-

பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் அரியலூர் மாவட்டம் முதலிடம் பிடித்தது குறித்து போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் செய்தியாளர்களிடம் பேசியதாவது:-

தற்பொழுது இது மிகப் பெரிய வரலாற்று நிகழ்வாக உள்ளது. அரியலூர் மாவட்டம் மாநிலத்தில் முதன்மையாக வந்துள்ளது கடந்த காலங்களில் பின்தங்கி இருந்த இந்த மாவட்டம் கல்வியில் முன்னேறி இருப்பது மகிழ்ச்சியான செய்தியாகும். கடந்த ஆண்டு பத்தாம் வகுப்பு தேர்வில் மாநிலத்தின் முதலிடம் என்பதும் இந்த ஆண்டு பிளஸ் 2 வில் முதலிடம் என்பது இந்த மாவட்டத்தின் வளர்ச்சியை காட்டுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி வழிகாட்டுதல் படி இந்த துறை மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது அதேபோல் அரியலூர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் முதன்மை கல்வி அலுவலர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளின் ஆசிரியர்கள் முழு உழைப்பையும் வழங்கி வெற்றி வாய்ப்பை இந்த மாவட்டத்தில் கொடுத்துள்ளார்கள். மாணவ மாணவிகளும் மிகச் சிறப்பான முயற்சி செய்து இந்த மகத்தான வெற்றிச் செய்தியை கொடுத்துள்ளார்கள்.

எனவே நமது மாவட்டத்தின் கல்வித்துறை சார்ந்த அத்தனை அதிகாரிகள் ஆசிரியர்களுக்கும் மாணவ செல்வங்களுக்கும் அரியலூர் மாவட்ட மக்கள் சார்பாக எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அரசு,மற்றும் தனியார் பள்ளிகளிலும் முதன்மை இடத்தை மாணவ மாணவிகள் பெற்றுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது என கூறினார்.

மேலும் நான் கடந்த 2006-2011 ஆண்டில் ஆண்டிமடம் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது தேர்வை வெல்வோம் என்ற புத்தகம், கையேடு வழங்கி சிறந்த ஆசிரியர்களை கொண்டு வழிகாட்டி பயிற்சி மாணவ, மாணவியர்களுக்கு கொடுத்தேன். தொடர்ந்து கல்விக்கு பணியாற்ற வேண்டும் என்ற குறிக்கோளோடு செயல்பட்டு வருகிறேன். அதன் பெயரிலேயே 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் என்னால் முடிந்த அளவில் முக்கிய வினா விடைகள் அடங்கிய புத்தகத் தொகுப்பை வழங்கி சிறிய அளவிலான எனது பங்களிப்பை அளித்தேன். அதேபோல் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் நேரடியாகச் சென்று மாணவ - மாணவிகளை சந்தித்து வாழ்த்துகளை தெரிவித்து உற்சாகப் படுத்தினேன். நான் வழங்கிய கையேடு அவர்களுக்கு உதவியாக இருந்திருக்கும் எனினும் ஆசிரியர்கள் பங்களிப்பு இதில் முக்கியமானது, மாணவ, மாணவியர்களும் மிகுந்த எச்சரிக்கையுடன் தாய், தந்தை, ஆசிரியர்களின் தியாகத்தை நினைத்து நன்றாக படித்து தேர்வில் வெற்றி பெற்று உள்ளார்கள். அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் சார்பிலும், எனது சார்பிலும் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறோம் என அமைச்சர் சா.சி.சிவசங்கர் கூறினார்.

### இராமநாதபுரம் ஒன்றிய, நகர, பேரூர்க் கழக

# இளைஞரணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

இராமநாதபுரம், மே 14-

இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் இளந்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இராமநாதபுரம் மாவட்டம் ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் நாளை (15.05.2025-வியாழக்கிழமை) காலை 10.00 மணி அளவில் இராமநாதபுரம், பாரதி நகர், பீமாஸ் வைஸ்ராய் மஹாலில் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர், கழக தேர்தல் பணிக் குழு தலைவர் ஆர். எஸ்.இராஜகண்ணப்பன், மாவட்டக் கழக பொருளாளர், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதி பார்வையாளர்கள் மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கொடி சந்திரசேகர் (பரமக்குடி தொகுதி பார்வையாளர்), மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் அருண் (திருவாடனை தொகுதி பார்வையாளர்), புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் மருத்துவர் எஸ்.சுதர்சன் (இராமநாதபுரம் தொகுதி பார்வையாளர்), விருதுநகர் தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வேல் முருகன் (முதுகுளத்தூர் தொகுதி பார்வையாளர்) ஆகியோர் கலந்து கொள்ள இருக்கிறார்கள். ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.





தலைமைக் கழக தணிக்கைக்குழுக் கூட்டம் நேற்று (13.5.2025) அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தணிக்கைக் குழு உறுப்பினர்கள் கு.பிச்சாண்டி, தி.அ.முகமது சகி, மதுரை வ.வேலுச்சாமி, என்.சுரேஷ்ராஜன், ஏனாதி பாலசுப்பிரமணியன், வழக்கறிஞர் சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.